அதை அமுல்படுத்துவோம், மிகுந்த தீவிரம் காட்டுவோம், அது மீண்டும் கொண்டுவரப்படும். மை காய்வதற்கு முன்பே அமுல்படுத்துகிற வேகம் என்று சொன்னார்கள். வேண்டு மானால் மாண்புமிகு முதல்வர் அவர்களோ, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோ மாறு வேடத்தில் வரட்டும். பல இடங்களுக்கு நான் அழைத்துச்செல்கிறேன்.

13-15 மணி

மை காய்ந்து ஓராண்டுக் காலம் ஆனாலும், நடவடிக்கை எடுக் காத கோப்புகள், மக்கள் நலத் திட்டங்கள் பல நிறைவேறாமல் இருக்கின்றன. நீங்கள் பியூரோக்ரசிக்கு பயப்படுவதாக நான் நினைக்கவில்லை. நீங்கள் பியூரோக்ரசிக்கு நாளுக்கு நாள் விட்டுக் கொடுத்துக்கொண்டே போவதைப் பொறுத்தவரையில் யூ ஆர் ஈல்டிங் டு தி பியூரோக்ரசி என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அந்தக் காலத்திலிருந்தே அவர்களுடைய போராட் டங்களைத் தூண்டியவர்கள் நீங்கள். ஆக, இன்னறக்கு பலி யாகிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அவர் களிடம் வேலை வாங்குவதில்தான் மக்களுடைய நல்வாழ்வு இருக்கிறது என்பதைச் சொல்லி தலைவர் அவர்களுக்கு என் னுடைய நன்றியைத் தெரிவித்து, இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

3. அறிவிப்பு

பேரவை அலுவல் நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. உறுப்பினர்களில் பலர் நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதால் அவர் களுக்கு வாய்ப்பு அளிக்கும்பொருட்டு 22-3-1990, வியாழக்கிழமை பேரவையின் கூட்டம் மாலையிலே 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, ாளை (22-3-1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் டும்.

பின்னர், பேரவை 13-15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.